# சபரகமுவ மாகாணக்கல்வி திணைக்களம்

WEEKLY SCHOOL
வாராந்தப் பாடசாலை

**10ம் வாரம்** *(July 2st Week)*

பாடம் - விஞ்ஞானம்
தரம் - 09
அலகு - அடர்த்தி

தயாரிப்பு :- திரு.ஜே. யோகநாதன்
இ/நிவி/தொலஸ்வல பாரதி தமிழ் வித்தியாலயம்.



(a)
நீர்க்குவளை



(b)
கிணறு



(c)
கடல்

❖ இங்கு நீர்க்குவளையில் குறைந்தளவு நீர் உள்ளது. எனவே இதன் திணிவும் கனவளவும் குறைவாகும்.(a)

❖ கிணற்றில் அதிகளவு நீர் உள்ளது. எனவே இதன் திணிவும் கனவளவும் அதிகமாகும்.(b)

❖ இவ்வாறு வெவ்வேறு சந்தர்பங்களில் காணப்படுகின்ற நீரின் அளவு வேறுபடுகின்ற போதிலும், நீரினது திணிவுக்கும் கனவளவுக்கும் இடையிலான தொடர்பு ஒரு மாறாத பெறுமானமாகும். இவ்வாறான இந்த மாறாத பெறுமானம் **நீரின் அடர்த்தி** எனப்படும்.

$$\text{அடர்த்தி} = \frac{\text{திணிவு}}{\text{கனவளவு}}$$

❖ யாதாயினும் ஒரு பதார்த்தின் ஒரலகு கனவளவின் திணிவு அப்பதார்த்தத்தின் **அடர்த்தி** எனப்படும்.

❖ இங்கு அடர்த்தி $p$ லும் திணிவு $m$ லும் கனவளவு $V$ லும் குறிக்கப்படும் போது $p = m/v$ எனக்காட்டலாம்.

1) அடர்த்தியின் நியம அலகு யாது?

2) $3\,m^3$ பெற்றோலின் திணிவு $2400\,kg$ எனின் பெற்றோலின் அடர்த்தியை காண்க?

3) அடர்த்தியினை அளவிடும் உபகரணம் யாது?

4) பல்வேறு திரவங்களின் அடர்த்தியை பட்டியல் படுத்துக?

| திரவம் | அடர்த்தி |
|---|---|
| | |
| | |
| | |

5) நீரமானி பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 4 எழுதுக?